Crl.Misc.39

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II COURT, KARUR

CC No.596/2025

| | | |
|---|---|---|
| Deposition of Witness for | | Prosecution PW-1<br>Defence<br>Court |
| Name | : | அருள்மணி |
| Father's Name | : | லோகநாதன் |
| Village | : | தாந்தோணிமலை |
| Taluk | : | கரூர் |
| District | : | கரூர் |
| Age | : | 43 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of (44 of 1969) of the day of 03.02.2026

எதிரி ஆஜரில்லை. எதிரிக்காக கு.விமு.ச பிரிவு 317 படி மனுதாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

1) நான் தற்போது கணபதிபாளையத்தில் குடியிருந்து கணக்காளராக வேலை செய்து வருகிறேன். விபத்தி இறந்து போன கலாமணி என்னுடைய அம்மா ஆவார். கடந்த 13.07.2021ம் தேதி என்னுடை அம்மா மற்றும் அப்பா முனையனூரில் உள்ள குலதெய்வத்திற்கு செல்வதற்காக TN 47 AJ 7715 என்ற TVS XL 100 இருசக்கர வாகனத்தில் கரூர் – திருச்சி ரோட்டில் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி குன்னனூர் பஸ் ஸ்டாப் அருகே சென்று

ஒம்/-எம்.சார்லஸ் ஆல்பர்ட்

நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்

கொண்டிருந்தார்கள் என்றும், அப்போது அதே திசையில் ஈரோடு மாவட்டம் அந்தியூரை சேர்ந்த விக்னேஷ் என்பவர் TN 09 BB 8100 என்ற HONDA CITY காரில் அதிகவேகமாகவும், கவனக்குறைவாகவும் வந்து எனது அம்மா மற்றும் அப்பா சென்ற இருசக்கர வாகனத்தில் வலது பக்க பக்க வாட்டில் மோதியதில் அவர்கள் கீழே விழுந்துவிட்டார்கள் என்றும், கீழே விழுந்ததில் எனது அப்பாவிற்கு இரண்டு கை முட்டியில் இரண்டு கால்விரல்களில் இடது பக்க நெற்றியில் ஊமைக்காயம் ஏற்பட்டிருந்தது என்றும், எனது அம்மாவிற்கு முன் நெற்றியில் இடது பக்க காது, கல்லீரலில் காய்ம ஏற்பட்டிருந்தது என்றும், இடது கால் முட்டியில் சிராய்ப்பு காயம் எற்பட்டிருந்தது என்றும், மேற்படி விபத்தை நேரில் பார்த்த ஜீவானந்தம் எனக்கு போன் செய்து ஆம்பூலன்ஸ் மூலமாக காயம்பட்ட எனது அம்மா மற்றும் அப்பாவை கரூர் அமராவதி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்திருப்பதாக போன் மூலம் தகவல் கூறினார். நான் மேற்படி மருத்துவமனைக்கு சென்று பார்த்த போது எனது அம்மா மற்றும் அப்பா மயக்க நிலையில் இருந்தார்கள். தகவல் அறிந்து வந்த வெள்ளியணை போலீசார் விபத்து குறித்து நடவடிக்கை எடுக்குமாறு புகார் வாக்குமூலம் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ– 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது–** பின்னர் மேல்சிகிச்சைக்காக எனது அம்மா மற்றும் அப்பாவை கோவை குமரன் மெடிக்கல் சென்டருக்கு அழைத்து செல்லும் வழியிலேயே எனது அம்மா இறந்துவிட்டார். பின்னர் எனது அம்மாவின் பிரேதத்தை கரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு கொண்டு சென்றேன். எனது அப்பாவை கோவை குமரன் மெடிக்கல் சென்டருக்கு அனுப்பி வைத்தேன். போலீசார் கரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் வைத்து என்னை விசாரணை செய்தார்கள்.

ஒம்/–எம்.சார்லஸ் ஆல்பர்ட்

நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

வழக்கறிஞர் ஆஜர். குறுக்குவிசாரணை செய்யப்படவில்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒம்/−எம்.சார்லஸ் ஆல்பர்ட்

நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.